**2022**

உரிமை குரல்
புதன்கிழமை 8.6.2022

# தமிழக அளவில் முதல் இடம், இந்திய அளவில் ஆறாவது இடம் பிடித்த காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி , ஜுன். 8

டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் வெளியிடப்பட்ட ஆசியப் பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியல் 2022ன் படி 122வது இடத்தைப் பெற்றுள்ளது.

2021ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 829க்கும் மேற்பட்ட ஆசிய அளவிலான கல்வி நிறுவனங்கள் தரவரிசைபடுத்தப்பட்டுள்ளன. இத்தரவரிசையில் காரைக்குடி.

அழகப்பா பல்கலைக்கழகமானது 122வது இடத்தைப் பெற்றுள்ளது.



இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட உயர்கல்வி நிறுவனங்களில் அழகப்பா பல்கலைக்கழகம் ஆறாவது இடத்தையும், தமிழக அளவில் முதலிடத்தையும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

டைம்ஸ் உயர் கல்வி நிறுவனம் இந்த தரவரிசைக்காக, கற்பித்தல், ஆராய்ச்சி, அறிவு பரிமாற்றம், சர்வதேச கண்ணோட்டம் மற்றும் தொழில்துறை வருமானம் ஆகிய ஐந்து குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் உயர் கல்வி நிறுவனங்களின் செயல் திறனை மதிப்பீடு செய்து தரவரிசைப் படுத்தியுள்ளது.

இத்தரவரிசைப் பட்டியலில் கலந்து கொள்வதற்காக அழகப்பா பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் பேரா. ஜெ. ஜெயகாந்தன் மற்றும் குழுவினர் பல்கலைக்கழகத்தின் 2021ம் ஆண்டுக்கான தரவுகளை சேகரித்து, சரியாகப் பகுப்பாய்வு செய்து சமர்ப்பித்திருந்தனர், இந்த உயரிய தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகத்தை இடம்பெற செய்த பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் பொறுப்புக்குழு தலைவரும், தமிழக உயர்கல்வித்துறை முதன்மை செயலாளருமான முனைவர். கார்த்திகேயன், அழகப்பா பல்கலை, துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் முனைவர் இரா.சுவாமிநாதன், பேரா. க.கருப்புச்சாமி மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேரா. சங்கரநாராயணன், முனைவர்குணசேகரன், டாக்டர். இராஜா மற்றும் பதிவாளர் (பொ) பேரா. இராஜாமோகன் ஆகியோர் பாராட்டினர்.

# அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையேயான தரவரிசைப் பட்டியல் : அழகப்பா பல்கலை.,சிறப்பிடம்

■ காரைக்குடி. ஜுலை.20

மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு கடந்த 2016 ஆண்டுமுதல், உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையேயான தரவரிசை பட்டியலை தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. 2022ஆம் ஆண்டிற்கான தேசிய கல்வி நிறுவன தரவரிசைப் பட்டியலை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திரா பிரதான் அவர்கள் ஜுலை 15ம் தேதி வெளியிட்டார்.

வெளிவிடப்பட்ட தரவரிசைப் பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையே 28வது ( யுனிவர்சிட்டி ராங்) இடமும், அகில இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான தரவரிசையில் 43வது இடமும் பெற்றுள்ளது. அகில இந்திய அளவில் தரவரிசைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 1875 உயர்கல்வி நிறுவனங்களுக்குள் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 53வது இடத்தைப் பெற்றுள்ளது



குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலிருந்து தரவரிசைப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவன தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம் 3வது இடத்தைப் பெற்றுள்ளது. மாநில கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் 2வது இடத்தையும் பெற்றுள்ளது.

மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எட்) கற்பித்தல் மற்றும் கற்பதற்கான வளங்கள் ,ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை பயிற்சி பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள், சர்வதேச வெளிப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வாதிகள் கருத்துக் கணிப்புகள் ஆகிய 5 குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் மதிப்பீடு செய்து தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆராய்ச்சி வெளியீடுகள் அதிகமான மேற்கோள்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

தேசிய கல்வி நிறுவன தரவரிசை என் ஐ ஆர்எப் 2022 கலந்து கொள்வதற்காக பல்கலைக்கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் ஜெ. ஜெயகாந்தன மற்றும் அவரது குழுவினர் 2022க்கான தரவுகளை அழகப்பா பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிர்வாகப் பிரிவுகளிடமிருந்து சேகரித்து முறைப்படுத்தி சமர்ப்பித்திருந்தார்,

சென்ற ஆண்டு (2021) அகில இந்திய பல்கலைக்கழக தரவரிசையில் 33வது இடத்திலிருந்த அழகப்பா பல்கலைக்கழகம் இந்த ஆண்டு (2022) 28வது இடத்திற்கும், அகில இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசையில் 57 வது இடத்திலிருந்து 53வது இடத்திற்கும் முன்னேறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய கல்வி அமைச்சகத்தால் 15,07,2022 அன்று புது டெல்லியில் நடைபெற்ற தேசிய கல்வி நிறுவன தரவரிசை பட்டியல் வெளியீட்டு விழாவில் அழகப்பா பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர் பேரா. க. கருப்புச்சாமி மற்றும் மூத்த பேராசிரியர் த.ரா.குருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்திய பல்கலைக்கழக தரவரிசைப்பட்டியலில் முதல் 30 இடத்திற்குள்ளும், உயர்கல்வி நிறுவன தரவரிசையில் முதல் 60 இடத்திற்குள்ளும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான தரவரிசையில் முதல் 50 இடத்திற்குள்ளும் இடம் பெற்றுள்ளது.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தை இடம்பெற செய்த அனைத்து பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் பொறுப்புக்குழு தலைவரும். தமிழ்நாடு அரசின் உயர்கல்வித்துறை செயலாளருமான முனைவர் கார்த்திகேயன், அழகப்பா பல்கலை ., துணைவேந்தர் குழு உறுப்பினர்கள் டாக்டர். ஆர்.சுவாமிநாதன், பேரா. க.கருப்புச்சாமி மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேரா. சங்கரநாராயணன், முனைவர் குணசேகரன், டாக்டர், . இராஜா மற்றும் பல்கலைபதிவாளர் (பொ) பேரா. ராஜமோகன் ஆகியோர் பாராட்டினர்.

# Alagappa Varsity placed 122 in Asia Rankings

Karaikudi, June 10: The Alagappa University Karaikudi, is placed in the 122nd Rank in Times Higher Education Asia Rankings 2022 released by the Times Higher Education (THE). Around 829 Institutions from Asia, have secured different positions in Times Higher Education Asia Universities Rankings 2022 and the Alagappa University has secured the 6th place in the overall institutions ranked in India and the first place at the Tamilnadu State level.



Under this the World Ranking, the performance of the participating institutions under 5 specific areas, viz. Teaching, Research, Knowledge Transfer, International Outlook and Industry Income have been assessed and analyzed.

However, the weightings are recalibrated to reflect the attributes of Asia's institutions. 13 carefully calibrated performance indicators are used for providing the most comprehensive and balanced comparisons, trusted by students, academics, university leaders, industry and governments", states the release.

Prof. Jeyakanthan, Director, Alagappa University ranking cell, and his team members, collected, analyzed and submitted the data to participate in THE World Ranking pertaining to the year 2021.

The Vice-Chancellor Officiating Committee Convener and Principal Secretary of Higher Education Department, Government of Tamilnadu, Dr Karthikeyan, Members of the VC Officiating committee, Dr Swaminathan, Prof. Karuppuchamy, and Members of the Syndicate, Prof. Sankara Narayanan, Dr Gunasekaran, Dr Raja and Registrar (i/c) Prof. Rajamohan, appreciated the coordinated efforts of both the academic and administrative staff and research scholars for achieving this position.

போதே இரவு 7 மணிக்கு | நிலைய எதிர்ப்புக்குழு உரு | அவர்கள்

# தமிழக அளவில் தரவரிசை பட்டியலில் அழகப்பா பல்கலைக்கழகம் முதலிடம்

துணை வேந்தர்

DINAKARAN – 21.01.2022

## பரவும் தன்மை அதிகமாக இருந்தாலும்


# ஒமிக்ரானால் உயிர்ப்பலி ஏற்படும் வாய்ப்பு குறைவு

## அழகப்பா பல்கலை. பேராசிரியர் தகவல்

காரைக்குடி, ஜன. 21: பரவும் தன்மை அதிகமாக இருந்தாலும் ஒமிக்ரானால் உயிர்ப்பலி ஏற்பட வாய்ப்புகள் குறைவு என அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை தலைவர் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரிதகவலியல் துறை தலைவர் ஜெயகாந்தன் கூறியதாவது :

கொரோனா வைரஸின் ஸ்பைக் புரதத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் நோய்த்தொடர்பு புரதங்களை அழிக்கும் மருந்துகள் குறித்து கடந்த 2 ஆண்டுகளாக தொடர் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகிறோம். ஒமிக்ரான் வைரஸ் கடந்த 2021 நவம்பரில் தென் ஆப்ரிக்காவில் கண்டறியப்பட்டது. உலகளவில் பல்வேறு ஆராய்ச்சிகளில் கிடைக்கப்பட்ட தரவுகளின் அடிப்படை மற்றும் உலக சுகாதார அமைப்பின் தரவுகளின் படி, 51 ஸ்பைக்புரதங்களில் ஏற்பட்ட மாற்றங்களை மட்டும் எடுத்துக்கொண்டு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.



▶ ஸ்பைக் புரத அமைப்பு மற்றும் பிணைப்பு ஏற்படுத்தும் பகுதியை பற்றி கணினி மூலம் கண்டறியப்பட்ட படம்.

நோய் பரவலுக்கு முக்கிய பங்காற்றும் ஸ்பைக் புரதம் 1,273 அமினோ அமிலங்களை கொண்டது. இந்த ஸ்பைக் புரதம் பல்வேறு வகையான மரபணு மாற்றங்களுக்கு உட்படும் தன்மை கொண்டது. இது 13 வகையான ஆல்பா, 10 வகையான பீட்டா, 13 வகையான காமா, 15 வகையான டெல்டா, 32 வகையான ஒமிக்ரான் போன்ற ஸ்பைக்புரத மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. துவக்கத்தில் ஸ்பைக் புரதமூலக்கூறும், மனித புரதமூலக்கூறும் பிணைப்பு ஏற்பட்டபோது மைனஸ் 112.2 என இருந்தது. தற்போது அதே ஒமிக்ரான் பிணைப்புஏற்படும்போது மைனஸ் 139.8 என்ற நிலையில் உள்ளது. இதனால் ஒமிக்ரான் அதிகமாக பரவி வருகிறது. பரவும் தன்மை அதிகமாக இருந்தாலும் உயிர்ப்பலி ஏற்பட வாய்ப்புகள் குறைவு. நோய்தொற்று தடுப்பு நடவடிக்கையாக அரசின் வழிகாட்டு விதிமுறைகளை கடைபிடிப்பது மற்றும் தடுப்பூசி போட்டுக்கொள்ளுதல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைபிடிப்பதே சிறந்தது. இதன் மூலம் தொற்றிலிருந்து முழுமையாக விடுபட முடியும். இவ்வாறு அவர் கூறினார்.



▶ பேராசிரியர் ஜெயகாந்தன்.

தினகரன் 21.07.2022

காரைக்குடி அழகப்பா பல்கலை.

# மாநில அளவில் மூன்றாவது இடம்

காரைக்குடி, ஜூலை 21: மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்) 5 குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் மதிப்பீடு செய்து தரவரிசை படுத்தி வருகிறது. இதில் கற்பித்தல் மற்றும் கற்பதற்கான வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை பயிற்சி, பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள், சர்வதேச வெளிப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், கருத்துக் கணிப்புகள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள், அதிகமான மேற்கோள்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தரவரிசைப்படுத்தும்.

தேசிய கல்வி நிறுவன தரவரிசை 2022 தரவரிசைப் பட்டியலில் கலந்து கொள்வதற்காக பல்கலைக் கழக தரவரிசைப் பிரிவின் இயக்குநர் பேராசிரியர் ஜெயகாந்தன் மற்றும் அவரது குழுவினர் தரவுகளை பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிர்வாகப் பிரிவுகளிடமிருந்து சேகரித்து முறைப்படுத்தி சமர்ப்பித்தார். சென்ற ஆண்டு அகில இந்திய பல்கலைக்கழக தரவரிசையில் 33வது இடத்திலிருந்து இந்த 28வது இடத்திற்கும், அகில இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசையில் 57வது இடத்திலிருந்து 53வது இடத்திற்கும் அழகப்பா பல்கலைக்கழகம் முன்னேறியுள்ளது.

அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கிடையே 28வது இடத்தை பெற்றுள்ளது. தமிழகத்திலிருந்து தரவரிசைப்படுத்தப்பட்ட பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவன தரவரிசையில் 3வது இடத்தையும், மாநில கலை மற்றும் அறிவியல் பல்கலைக் கழகங்களின் தரவரிசையில் 2வது இடத்தையும் பெற்றுள்ளது. தரவரிசையில் அழகப்பா பல்கலைக் கழகத்தை இடம் பெற செய்த அனைத்து பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்களை துணைவேந்தர் பொறுப்புக்குழு தலைவர், உயர்கல்வித்துறை செயலாளர் முனைவர் கார்த்திகேயன், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் டாக்டர் சுவாமிநாதன், பேராசிரியர் கருப்புச்சாமி, பதிவாளர் பேராசிரியர் ராஜமோகன், ஆட்சிக்குழு உறுப்பினர்கள் சங்கரநாராயணன், முனைவர் குணசேகரன், ராஜா ஆகியோர் பாராட்டினர்.

# தேசிய அளவில் 28 ஆவது இடம்பெற்ற அழகப்பா பல்கலைக்கழகம்.

மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசியக் கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (National Institutional Ranking Framework-NIRF) 2016 முதல் உயர்கல்வி நிறுவனங்களுக்கு இடையேயான தரவரிசைப் பட்டியலை தொடர்ந்து வெளியிட்டுவருகிறது.

2022 ஆம் ஆண்டிற்கான தேசியக் கல்வி நிறுவன தரவரிசைப்பட்டியலை மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் வெளியிட்டார்.

வெளியிடப்பட்ட தரவரிசைப்பட்டியலில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், அகில இந்திய பல்கலைக் கழகங்களுக்கு இடையே

28 ஆவது (University Rank) இடமும், அகில இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான (Reserch Institutions) தரவரிசையில்

43 ஆவது இடமும் பெற்றுள்ளது.

அகில இந்திய அளவில் தரவரிசைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 1875 உயர்கல்வி நிறுவனங்களுக்குள் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் 53 வது இடத்தை பெற்றுள்ளது, குறிப்பிடத்தக்கது.

தமிழகத்திலிருந்து தரவரிசைப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவன தரவரிசையில் அழகப்பா பல்கலைக்கழகம்

3 வது இடத்தை பெற்றுள்ளது.

மாநில கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் 2 வது இடத்தையும் பெற்றுள்ளது.

மத்திய கல்வி அமைச்சகத்தின் தேசியக் கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு (என்.ஐ.ஆர்.எப்.) கற்பித்தல் மற்றும் கற்பதற்கான வளங்கள், (Teaching Learning and Resources), ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை பயிற்சி,( Research and Professional Practice), பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சி மாணவர்களின் தேர்வு முடிவுகள் (Graduation Outcomes), சர்வதேச வெளிப்பாடு மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள், கருத்துக் கணிப்புகள் ஆகிய ஐந்து குறிப்பிட்ட பகுதிகளின் கீழ் மதிப்பீடு செய்து தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஆராய்ச்சி வெளியிடுதல், அதிகமான மேற்கோள்களையும் கணக்கில் எடுத்து கொண்டு தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளது.

தேசியக் கல்வி நிறுவன தரவரிசை (NIRF) 2022 தரவரிசைப் பட்டியலில் கலந்து கொள்வதற்காக பல்கலைக்கழக தரவரிசை பிரிவின் இயக்குனர் ஜெயகாந்தன் மற்றும் அவரது குழுவினர் 2022 ஆண்டிற்கான தரவுகளை அழகப்பா பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிர்வாக பிரிவுகளிடமிருந்து சேகரித்து, முறைப்படுத்தி சமர்ப்பித்திருந்தார்.

சென்ற ஆண்டு 2021 அகில இந்திய பல்கலைக்கழக தரவரிசையில் 33 வது இடத்திலிருந்த அழகப்பா பல்கலைக்கழகம், இந்த ஆண்டு (2022) 28 வது இடத்திற்கும், அகில இந்திய உயர்கல்வி நிறுவனங்களுக்கான



தரவரிசையில் 57 வது இடத்திலிருந்து 53 வது இடத்திற்கும் முன்னேறி உள்ளது குறிப்பிடத்தக்கது.

மத்திய கல்வி அமைச்சகத்தால் புதுடெல்லியில் நடைபெற்ற தேசியக் கல்வி நிறுவன தரவரிசைப் பட்டியல் வெளியீட்டு விழாவில், அழகப்பா பல்கலைக் கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர் பேரா. கருப்பசாமி மற்றும் மூத்த பேரா. குருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். இந்திய பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் முதல் 30 இடத்திற்குள்ளும், உயர்கல்வி நிறுவன தரவரிசையில் முதல் 60 இடத்திற்குள்ளும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான தரவரிசையில் முதல் 50 இடத்திற்குள்ளும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தை இடம்பெறச்செய்த அனைத்து பேராசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள், துணைவேந்தர் பொறுப்புக் குழு தலைவரும், தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறை செயலாளருமான முனைவர் கார்த்திகேயன், உறுப்பினர்கள் டாக்டர் சுவாமிநாதன் பேராசிரியர் கருப்பசாமி மற்றும் ஆட்சிக் குழு உறுப்பினர்கள் பேராசிரியர் சங்கரநாராயணன் முனைவர் குணசேகரன், டாக்டர் ராஜா மற்றும் பதிவாளர் (பொறுப்பு) பேராசிரியர் ராஜாமோகன் ஆகியோர் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.

அழகப்பா பல்கலையில்

# சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கு விருது



காரைக்குடி அழகப்பா பல்கலையில் சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கு துணைவேந்தர் ஜி.ரவி விருதினை வழங்கினார்.

காரைக்குடி, டிச.4: காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தின் உயிரித் தகவலியல் துறையில் சமீபத்திய ஆய்வுகளை பயன்படுத்தி மருந்து கண்டுபிடிக்க உயிரி தகவலியல் துறை மற்றும் மருந்து கண்டுபிடிப்பு அமைப்பு (பிட்ஸ்) உருவாக்கப்பட்டது. இவ் அமைப்பு சார்பில் உலகம் முழுவதிலும் உள்ள சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கு விருது வழங்கப்பட்டு வருகிறது. உயிரி தகவலியல் துறைத் தலைசர் மற்றும் பிட்ஸ் அமைப்பின் தலைவர் பேராசிரியர் ஜெயகாந்தன், செயலாளர் பேராசிரியர் சஞ்சீவ்குமார் சிங் ஆகியோர் இந்த ஆண்டுக்கான விருது வழங்கும் விழாவை நடத்தினர்.

இதில் பேராசிரியர் விஜயன் நினைவு விருதினை உத்திரபிரதேசம் அலிகார் பல்கலைக்கழக உயிரிதொழில் நுட்பவியல் துறை டாக்டர் ரிஸ்வான் ஹசனுக்கு அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி வழங்கினார். வாழ்நாள் சாதனையாளர் விருதினை புதுடெல்லி எய்ம்ஸ் உயிரி இயற்பியல் துறை டாக்டர் புனித் கவுருக்கு விஐடி பல்கலைக்கழக துணைத் தலைவர் டாக்டர் சேகர் விஸ்வநாதன் வழங்கினார். பேராசிரியர் சீனிவாசன் நினைவு விருதினை ஆராய்ச்சியாளர் டாக்டர் கிருபாதேஷ்முக், குஜராத் பல்கலைக்கழக வேதியியல் துறை பேராசிரியர் ஹிதேஷ் டி பட்டேல் ஆகியோருக்கு மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர் கிருஷ்ணன் வழங்கினார். இளம் விஞ்ஞானி விருதினை வாரணாசி ஐஐடி உயிரி வேதியியல் துறை சார்ந்த டாக்டர் ஆதித்யகுமார் பதிக்கு, ஜப்பான் பல்கலைக்கழக பேராசிரியர் அகியோ எபிஹாரா வழங்கினார். சிறந்த ஆராய்ச்சி மாணவர் விருதினை புதுடெல்லி ஜமியா மில்லா இஸ்லாமிய பல்கலைக்கழக அடிப்படை அறிவியல் மையத்தை சேர்ந்த டாக்டர் தாஜ் முகமதுக்கு இந்திய மருத்துவ அறிவியல் நிறுவன பேராசிரியர் டி.பி.சிங் வழங்கினார். ஆட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் சுவாமிநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்து தமிழ் திசை
21.07.2022

# தேசிய அளவில் 28-வது இடம் பெற்ற காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம்

காரைக்குடி

மத்திய கல்வி அமைச்சக தேசிய கல்வி நிறுவன தரவரிசை அமைப்பு, 2022-ம் ஆண்டுக்கான தேசிய கல்வி நிறுவன தரவரிசைப் பட்டியலை வெளியிட்டது.

இதில் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம் அகில இந்திய அளவில் பல்கலைக் கழகங்களுக்கான தரவரிசை அளவில் 28-வது இடமும், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான தரவரிசையில் 43-வது இடமும் பெற்றது.

இந்திய அளவில் தரவரிசைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 1,875 உயர்கல்வி நிறுவனங்களில், தரவரிசையில் 53-வது இடம் பெற்றுள்ளது. தமிழக அளவில் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான தரவரிசையில் 3-வது இடமும், கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களுக்கான தரவரிசையில் 2-வது இடமும் பெற்றது. அழகப்பா பல்கலைக் கழக தரவரிசைப் பிரிவு இயக்குநர் ஜெயகாந்தன் மற்றும் அவரது குழுவினர், பேராசிரியர்கள், அலுவலர்கள், ஆராய்ச்சி மாணவர்களை துணை வேந்தர் பொறுப்புக்குழு தலைவரும், உயர் கல்வித்துறை செயலாளருமான கார்த்திகேயன், உறுப்பினர்கள் சுவாமிநாதன், கருப்புச்சாமி, ஆட்சிக்குழு உறுப்பினர்கள் சங்கரநாராயணன், குணசேகரன், ராஜா, பதிவாளர் (பொ) ராஜமோகன் ஆகியோர் பாராட்டினர்.

அழகப்பா பல்கலைக் கழகத்தில்

# உயிர்க்கொல்லி நோய் மருந்து கண்டறிய ஆராய்ச்சி மையம்

## துறைத்தலைவர் தகவல்

**காரைக்குடி, மே 9:** காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழக உயிரி தகவலியல் துறைக்கு உயிர்க்கொல்லி நோய் மருந்து கண்டறிய ஆராய்ச்சி மையம் துவங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது என துறைத்தலைவர் பேராசிரியர் ஜெயகாந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறையின் சார்பில் பல்வேறு வகையான நோய்களுக்கு மருந்து கண்டுபிடிக்க ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கொசு மூலம் பரவும் டெங்கு, மலேரியா, சிக்குன் குனியா போன்றவைகளால் வரும் காய்ச்சலை குணப்படுத்தும் மருந்து மூலக்கூறுகளை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி நடக்கிறது.

தவிர கொரோனா வைரஸின் நோய்த் தொற்று தொடர்பான புரதங்களையும் அதன் உரு மாறும் தன்மையையும் கண்டுபிடித்து அதனை அழிக்கும் மருந்துச் சேர்மங்களை கண்டுபிடிக்கும் ஆராயச்சிகள் தொடர்ந்து நடக்கிறது.

இந்நோய்களுக்கான சிறந்த தீர்வுகளை காண்பதற்கு இப்பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறைக்கு மத்திய அரசின் உயிரி தொழில் நுட்பவியல் துறை உயிர்க்கொல்லி நோய் மருந்து கண்டறியும் ஆராய்ச்சி மையம் நிறுவ அனுமதியளித்துள்ளது. இதற்காக 5 ஆண்டுகளுக்கு 3 கோடியே 50 லட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆராய்ச்சிக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மை ஆய்வாளராக நானும். பேராசிரியர் சஞ்சிவ்குமார் சிங், பேராசிரியர் கார்த்திகேயன் துணை ஆய்வாளர்களாகவும் செயல்பட உள்ளோம்.

தவிர மூன்று ஆராய்ச்சி விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி கூட உதவியாளருடன் இணைந்து புதிய வகை மருந்து மூலக்கூறுகளைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

நோய் தொற்று தொடர்பான புரத இலக்குகளை எளிதில் கண்டறியவும், சமுதாயத்தை அச்சுறுத்தும் நோய்களை குணப்படுத்தும் மருந்து மூலக்கூறுகளை அடையாளம்காண இம்மையம் பயனாக இருக்கும் என்றார்.

பல்கலைக்கழகத்தில் இம்மையம் அமைந்ததற்கு துணைவேந்தர் பொறுப்புக்குழு தலைவர், உயர் கல்வி செயலாளர் கார்த்திகேயன், துணைவேந்தர் பொறுப்புக்குழு உறுப்பினர்கள் டாக்டர் சுவாமிநாதன், பேராசிரியர் கருப்புச்சாமி, ஆட்சிக்குழு உறுப்பினர்கள் பேராசிரியர்கள் சங்கரநாராயணன், குணசேகரன் ராஜா ஆகியோர் பாராட்டினர்.

# DBT sanctions Rs. 350 lakh to Algappa University to set up BIC


Karaikudi, May 14:

The Department of Biotechnology (DBT), New Delhi has approved and sanctioned some of Rs. 350 lakhs to the Department of Bioinformatics, Alagappa University, Karaikudi, to establish a Bioinformatics and Computational Biology Centre (BIC) for a period of 5 years. The objectives of the BIC centre is to create and maintain sophisticated Bioinformatics resources and conduct workshops / hands-on training programmes for the benefit of researchers and aspiring students and teachers, especially from rural background.

It is the first state University in Tamilnadu to establish this BIC centre.Both, the BIC Centre and National Networking Project (NNP), were proposed and initiated by the Project Coordinator and Principal Investigator (PI).

Prof Dr.Jayakanthan, HOD of Bioinformatics, Prof.Sanjeev Kumar Singh and Asst. Prof. Dr M.Karthikeyan are the other Co-Principal investigator.

The main work of the BIC Centre is to produce highly skilled manpower trained in the area of Bioinformatics, Computational Biology and Computer Aided Drug Design. The BIC Centre will also develop multi drugs through computational and experimental approaches



on the research theme of "Identification of Potent Drug for Life-Threatening Diseases"

A typical drug discovery cycle takes about 15 years with an approximate cost of 800 million to get approval for marketing. However, the BIC Centre in the Department of Bioinformatics, Alagappa University, will employ rapid and cost-effective Bioinformatic methods to decipher the Structural and Functional aspects of therapeutic protein targets in various infectious diseases and human disorders using various Structural Biology and Protein Crystallography techniques. Besides, the Mechanism of Action (MoA) of the targeted proteins and their interactions with the identified leads can also be unravelled by Computer-Aided Drug Discovery (CADD) approach.

The developed drugs will be targeted against several life-threatening diseases such as Cancer, Virus and Bacterial Infectious diseases. Especially the research in BIC will focus on identifying potent leads for viral fever caused by mosquito-borne diseases such as Dengue, Malaria and Chikungunya. In addition, Crystallography studies on major druggable proteins responsible for human life-threatening diseases such as Cancer, Hypertension and Diabetes will also be deciphered besides identifying novel therapeutics against the targets. The convenor of the Vice-Chancellor Officiating Committee of Alagappa University, Dr.D.Karthikeyan IAS, Principal Secretary, Department of Higher Education, Government of Tamilnadu, and Members

Dr R.Swaminathan, Prof.S.Karuppuchamy, Syndicate Members Prof. K. Sankaranarayanan, Dr K. Gunasekaran, Dr M. L. Raja and the Registrar i/c Prof. S. Raja Mohan congratulated the Professors and research students on their richly deserved honour for doing outstanding research for many years that contributed to this noteworthy achievement.



Printed from
THE TIMES OF INDIA

# New study backs anti-viral powers of 'kabasura kudineer'

TNN | Nov 11, 2022, 10.43 AM IST



MADURAI: A recently published in silico (computer simulation) study in Indian Journal of Biochemistry and Biophysics has shown promise in establishing possible anti-viral potential of phytochemicals in kabasura kudineer, betel leaf and keelanelli and their potential use as Covid-19 therapeutics.

Indian Journal of Biochemistry and Biophysics is a peer-reviewed research journal of CSIR-National Institute of Science Communication and Policy Research (CSIR-NIScPR), New Delhi.

## IMPROVING IMMUNITY?

- Research showed several phytochemicals in the compounds exhibited inhibitory activity against SARS-CoV-2 protein targets
- Phytochemicals can potentially act as multi-targeting drug cocktail
- Study said proposed compounds have safety margins and therapeutic effects potentially superior to reference drugs used in treatment of Covid-19




Dr J Jeyakanthan, head of Bioinformatics department, Alagappa University, Karaikudi and Dr N Arul Murugan, KTH Royal Institute of Technology, Stockholm, Sweden (currently at Indraprastha Institute of Information Technology, Delhi) studied the anti-viral activity of medicinal plants using in silico approaches to provide scientific evidence supporting therapeutic properties of the herbal drugs and their formulations.

"Currently, omicron variant of SARS-CoV-2 virus has more than 100 hundred sub-lineages. Extensive researches are still in progress to discover effective therapeutics against SARS-CoV-2 ," said Dr Jeyakanthan.

Ayush ministry recommended siddha polyherbal formulation kabasura kudineer with 42 compounds from different medicinal plants, including betel leaf and keelanelli. "Based on this rationale, the best anti-Covid-19 compounds from kabasura kudineer were screened.

In this study, the therapeutic effects of the chosen compounds were comprehensively studied for their binding efficiency with human ACE-2 receptor, SARS-CoV-2 protein targets (PLpro; 3CLpro, RdRp) and interface region of spike protein-ACE-2 complex," explained Dr Jeyakanthan. The research showed that a few phytochemicals exhibited efficient inhibitory activity against PLpro while Chebulagic acid was highly active against 3CLpro and RdRp.

# அழகப்பா பல்கலையில் நவ.,21ல் பன்னாட்டு கருத்தரங்கு


**காரைக்குடி, நவ.18–**

மருந்து வடிவமைப்பில் உயிரி தகவலியல், கம்ப்யூட்டர் உதவியின் சமீபத்திய போக்குகள் குறித்த தேசிய கருத்தரங்கு காரைக்குடி அழகப்பா பல்கலையில் நவ., 21 அன்று துவங்குகிறது. பல்கலை துணைவேந்தர் ஜி.ரவி தலைமை வகிக்கிறார்.

வேலூர் இன்ஸ்டிடீயூட் ஆப் டெக்னாலஜி துணை தலைவர் சேகர் விஸ்வநாதன் துவக்க உரை ஆற்றுகிறார். டில்லி எய்ம்ஸ் மருத்துவமனை பேராசிரியர் டி.பி., சிங், திருவாரூர் மத்திய பல்கலை துணைவேந்தர் எம்.கிருஷ்ணன், திருச்சி பாரதிதாசன் பல்கலை முன்னாள் துணைவேந்தர் பி.மணிசங்கர், ஜப்பான் பல்கலை அப்லைடு பயாலஜிகல் சயின்ஸ்' துறை தலைவர்அகியோஎபிஹரா பங்கேற்கின்றனர். கன்வீனர் ஜெயகாந்தன் கருத்தரங்கு ஏற்பாடுகளை செய்து வருகின்றார். நவ., 25 வரை தொடர்ந்து 5 நாட்கள் இக்கருத்தரங்கு நடைபெறும்.

## அறிவை, ஆராய்ச்சி உத்திகளை மேம்படுத்த

# இளம் ஆராய்ச்சியாளர்கள் எதிர்கால ஆராய்ச்சிகள் குறித்து அறிய வேண்டும்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரிதகவலியல் துறை சார்பில் நடந்த சர்வதேச கருத்தரங்கில் விழா மலரை துணைவேந்தர் ஜி.ரவி வெளியிட்டார்.

### துணைவேந்தர் ஜி.ரவி பேச்சு

**காரைக்குடி, நவ. 22:** அறிவையும், ஆராய்ச்சி உத்திகளையும் மேம்படுத்த இளம் ஆராய்ச்சியாளர்கள் எதிர்கால ஆராய்ச்சிகள் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும் என துணைவேந்தர் ஜி.ரவி தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் கணினி சார்பு மருந்து கண்டறிதலின் நவீன உத்திகள், வளர்ச்சிகள்,உயிரி தகவலியல் கட்டமைப்பு குறித்த 5 நாட்கள் சர்வதேச கருத்தரங்கின் துவக்கவிழா நடந்தது.

விழாவில் துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி தலைமை வகித்து பேசியதாவது :

இப்பல்கலைக்கழகம் உலக அளவில் வியந்தகு வளர்ச்சியையும், சிறந்த அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. இக் கருத்தரங்கில் சர்வதேச அளவில் 38 ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் 200க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி மாணவர்கள் கலந்து கொண்டுள்ளனர். தகவலியல் துறை முதன்மை துறையாக விளங்குவதுடன், உள் கட்டமைப்பு, கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி நிதியாக ரூ.3 கோடியே 50 லட்சம் உயிரி தொழில்நுட்பவியல், உயிரி தகவலியல் கணினி உயிரியல் துறையிடம் இருந்து பெற்றுள்ளது. இளம் ஆராய்ச்சியாளர்கள் அறிவையும், ஆராய்ச்சி உத்திகளையும் மற்றும் மேம்படுத்தப்பட்ட எதிர்கால ஆராய்ச்சி குறித்து தெரிந்து கொள்வது அவசியம். அதற்கு இதுபோன்ற கருத்தரங்குகள் நல்ல வாய்ப்பாக அமையும்.

இவ்வாறு பேசினார்.

மேலும் இந்த விழாவில் புதுடெல்லி அனைத்து இந்திய மருத்துவ அறியில் நிறுவன பேராசிரியர் டிபிசிங், ஜப்பான் பல்கலைக்கழக பேராசிரியர் எபிஹாரா, சென்னை எஸ்எம்இடி பல்கலைக்கழக ஆராய்ச்சி முதன்மையர் பேராசிரியர் வேல்முருகன், அழகப்பா பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் சுவாமிநாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# அழகப்பா பல்கலை.யில் சர்வதேசக் கருத்தரங்கு



அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரி தகவலியல் துறை சார்பில் திங்கள்கிழமை நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கு தொடக்க விழாவில் விழா மலரை வெளியிட்ட துணைவேந்தர் க. ரவி.

காரைக்குடி,நவ.21: காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் உயிரி தகவலியல் கட்டமைப்பு, கணினி சார்பு மருந்து கண்டறிதலின் நவீன உத்திகள், வளர்ச்சிகள் குறித்த கருத்தரங்கம் திங்கள்கிழமை தொடங்கியது.

நவ. 25 வரை நடைபெறும் இக்கருத்தரங்கில், துணைவேந்தர் க. ரவி தலைமை வகித்துப் பேசினார். வேலூர் தொழில்நுட்ப நிறுவனத்தின்(விஐடி) துணைத்தலைவர் சேகர் விஸ்வநாதன் கருத்தரங்கை தொடக்கி வைத்தார்.

புதுதில்லி அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் நிறுவன பேராசிரியர் டி.பி. சிங், திருவாரூர் மத்தியப் பல்கலைக் கழக துணைவேந்தர் ஆ. கிருஷ்ணன், ஜப்பான் பல்கலைக்கழக பேராசிரியர் அகியோ எபிஹாரா, சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி முதன்மையர் டி. வேல்முருகன், அழகப்பா பல்கலைக் கழக ஆட்சிகுழு உறுப்பினர் ஆர். சுவாமிநாதன் ஆகியோர் பேசினர்.

முன்னதாக உயிரித்தகவலியல் துறைத் தலைவர் ஜெ. ஜெயகாந்தன் வரவேற்றுப் பேசியதாவது:

அழகப்பா பல்கலைக்கழக உயிரித் தகவலியல் துறை சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்து ரூ. 16 கோடிக்கும் அதிகமான நிதி உதவிகளை பெற்றுள்ளது. மேலும் 650-க்கும் மேற்பட்ட ஆய்வறிக்கைகளை வெளியிட்டு சர்வதேச கல்வி நிறுவனங்களுக்கு நிகராக விளங்குகிறது. இங்குள்ள உயிரி தகவலியல் துறை மருந்து கண்டுபிடிப்பில் தொடர்ந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

உயிர்க் கொல்லிகளுக்கு (சார்ஸ் கோவிட்-2) எதிரான மருந்துக் கலவையை தாவர மருந்து சேர்மங்களிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இத்துறையின் ஆராய்ச்சியாளர்கள் உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு எதிரான புதிய சிகிச்சை முறைகளை அடையாளம் காண நம்பகமான கணக்கீட்டு கருவிகளை உருவாக்கி வருகின்றனர் என்றார். கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர் சஞ்சீவ்குமார் சிங் நன்றி கூறினார்.

# தாவர நோய்களை தடுத்தால் மனித நோய்களை தவிர்க்கலாம்

## சர்வதேச கருத்தரங்கில் ஆராய்ச்சியாளர்கள் தகவல்



காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் நடந்த சர்வதேச கருத்தரங்கில் துறைத்தலைவர் பேராசிரியர் ஜெயகாந்தன் பேசினார்.

காரைக்குடி, நவ.29: தாவரங்களுக்கு வரும் நோய்களை தடுத்தால் மனிதர்களுக்கு வரும் பெரும்பாலான நோய்களை தடுக்க முடியும் என, காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடந்த சர்வதேச கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை சார்பில் உயிரி தகவலியல் கட்டமைப்பு மற்றும் கணினி சார்பு மருந்து கண்டறிதலின் நவீன உத்திகள், வளர்ச்சிகள் குறித்த சர்வதேச கருத்தரங்கம் நேற்று நடந்தது. ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சஞ்சீவ்குமார் வரவேற்றார். துணைவேந்தர் பேராசிரியர் ஜி.ரவி தலைமை வகித்து துவக்கி வைத்தார்.

கருத்தரங்கு குறித்து உயிரி தகவலியல் துறை தலைவரும், கருத்தரங்கின் அமைப்பாளருமான பேராசிரியர் ஜெயகாந்தன் கூறியதாவது: இப்பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை, சர்வதேச மற்றும் தேசிய அளவில் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்து ரூ.16 கோடிக்கும் அதிகமான நிதி உதவிகளை பெற்றுள்ளது. சர்வதேச ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை முன்னிலைப்படுத்தி இப்பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறை மருந்து கண்டுபிடிப்பு ஆராய்ச்சி மேற்கொண்டு வருகிறோம். இதில் உயிர்க்கொல்லியான கோவிட்க்கு எதிரான மருந்து கலவையை தாவர மருந்து சேர்மங்களில் இருந்து கண்டறிந்துள்ளோம். தவிர உயிருக்கு ஆபத்தான நோய்களுக்கு எதிரான புதிய சிகிச்சை முறைகளை அடையாளம் காண நம்பகமான கணக்கீட்டு கருவிகளை உருவாக்கி வருகிறோம்.

இக்கருத்தரங்கில் புதிய டிரக்மாடல் கண்டுபிடிப்புகள் குறித்து விவாதிக்கப்பட்டது. செயற்கை உரங்களை பயிர்களுக்கு அளவுக்கு அதிகமாக பயன்படுத்தும் போது, அவை தேவையான உரங்களை மட்டும் எடுத்துக் கொள்ளும். மீதம் உள்ள தேவையற்ற உரம் மண்ணில் தங்கிவிடும். இதனால் மண் கெட்டுப்போவதோடு மனித உடலுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே எவ்வளவு தேவையோ அந்த அளவு மட்டுமே உரத்தை பயன்படுத்த வேண்டும். மனிதர்களுக்கு வரும் அனைத்து பாதிப்புகளும் தாவரங்களுக்கு வரும். தாவரங்களை தாக்கும் பாக்டீரியா, வைரஸ் வேர் மற்றும் இலைகளை தாக்கும். இதன் மூலம் மனிதர்களுக்கு பரவும். தாவரங்களுக்கு வரும் நோய்களை தடுத்தால் மனிதர்களுக்கு வரும் பெரும்பாலான நோய்களை தடுக்க முடியும் என ஆராய்ச்சியாளர்கள் கருத்தரங்கில் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கூறினார்.